மைசூரு–ராமேசுவரம் இடையே சேலம் வழியாக சிறப்பு ரயில்

சேலம், அக். 4: பண்டிகை காலங்களில் அதிகரித்துவரும் கூட்ட நெரிசலை கருத்தில் கொண்டு, மைசூரு - ராமேசுவரம் இடையே சேலம் வழியாக சிறப்பு ரயில் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தெற்கு ரயில்வே சேலம் கோட்டம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

பண்டிகைக் காலங்களில் அதிகரித்து வரும் பயணிகள் கூட்ட நெரிசலை கருத்தில் கொண்டு சிறப்பு ரயில்களை ரயில்வே நிர்வாகம் அறிவித்து வருகிறது. அந்தவகையில், கர்நாடகா மாநிலம், மைசூரில் இருந்து சேலம், நாமக்கல் வழியாக ராமேசுவரத்துக்கு வாராந்திர சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

அதன்படி, மைசூரு -ராமேசுவரம் வாராந்திர சிறப்பு ரயில் வரும் 5 ஆம் தேதி முதல் நவ. 30 ஆம் தேதி வரை திங்கள்கிழமை தோறும் இயக்கப்படும். மைசூரில் இருந்து மாலை 6.35 மணிக்கு புறப்பட்டு, மண்டியா, ராமநகரம், கேஎஸ்ஆர் பெங்களூரு, ஒசூர், தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல், மதுரை, மானாமதுரை, ராமநாதபுரம் வழியாக ராமேசுவரத்துக்கு மறு நாள் காலை 11 மணிக்கு சென்றடையும்.

மறுமார்க்கத்தில் ராமேசுவரம்-மைசூரு வாராந்திர சிறப்பு ரயில் வரும் 6 ஆம் தேதி முதல் டிச.1 ஆம் தேதி வரை செவ்வாய்க்கிழமைகளில் இயக்கப்படும். ராமேசுவரத்தில் இருந்து மாலை 3.30 மணிக்கு புறப்பட்டு, ராமநாதபுரம், பரமக்குடி, மதுரை, திண்டுக்கல், கரூர், நாமக்கல், சேலம், தருமபுரி, ஒசூர் வழியாக மைசூருக்கு மறுநாள் காலை 7.45 மணிக்கு சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆத்தூர் ரயில் நிலையத்தில் பயணிகள் அவதி

ஆத்தூர், அக். 4: ஆத்தூர் ரயில் நிலையத்தில் விருத்தாசலம் ரயில் ஒருமணி நேரத்திற்கும் மேலாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் பயணிகள் அவதியடைந்தனர்.

சேலம்-ஆத்தூர் ரயில் பாதையில் ஆத்தூரில் இருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ள பழனியாபுரி சாலையில் உள்ள ரயில் பாதையில் சுரங்கப்பாதை அமைக்கும் பணியில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டதால் ரயில் ஒரு மணி நேரம் நிறுத்திவைக்கப்பட்டதாக கூறப்பட்டது.

மேலும், அந்த வழியாக வந்த சரக்கு ரயிலும் நிறுத்திவைக்கப்பட்டது. இதனால், விருத்தாசலத்தில் இருந்து சேலம் நோக்கி சென்ற ரயில் ஒருமணி நேரத்திற்கும் மேலாக ஆத்தூர் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டதால் பயணிகள் அவதியடைந்தனர்.

சேலம் சோனா கல்வி நிறுவனத்தில் கேம் ஆன் கிளப் தொடக்கம்



சேலம் சோனா கல்வி நிறுவனத்தில் கேம் ஆன் கிளப்பை தொடங்கி வைத்த சோனா கல்வி நிறுவன துணைத் தலைவர் தியாகு வள்ளியப்பா.

சேலம், அக். 4: சேலத்தை விளையாட்டு மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் வளர்ந்து வரும் முக்கிய மையமாக உருவாக்கும் நோக்கில், 'கேம் ஆன் கிளப்' தொடக்க விழா சேலம் சோனா கல்வி நிறுவனங்களில் சனிக்கிழமை நடைபெற்றது.

மாணவர்கள் கேமிங் மற்றும் கேம் டெவலப்மென்ட் துறையில் புதிய திறன்களை கற்றுக்கொள்வது, தங்களது படைப்புகளை உருவாக்குவது, போட்டிகளில் பங்கேற்பது மற்றும் தொழில்துறை நிபுணர்களுடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் இந்த கிளப் தொடங்கப்பட்டுள்ளது.

சோனா ஸ்டார் இன்னோவேஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஆதரவுடன் செயல்படும் இந்த முயற்சியை சோனா கல்வி நிறுவனத்தின் துணைத் தலைவர் தியாகு வள்ளியப்பா தொடங்கியுள்ளார். பயிற்றுநர் ரவீந்திர சாஹ் வழிகாட்டுதலுடன் கேம் ஆன் கிளப் செயல்பட உள்ளது.

இதுகுறித்து சோனா கல்வி நிறுவன துணைத் தலைவர் தியாகு வள்ளியப்பா கூறுகையில், கேம் டெவலப்மென்ட் துறையில் மாணவர்கள், இளம் தொழில்முனைவோருக்கு ஏராளமான வாய்ப்புகள் உருவாகி வருகின்றன. கேம் டெவலப்மென்ட் துறையில் செயல்படும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை சேலத்தில் தங்களது செயல்பாடுகளை தொடங்க அழைத்து, மாணவர்களுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு ஏற்படுத்தப்படும். இதன்மூலம் மாணவர்கள், கேம் டெவலப்பர்கள், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை நிபுணர்களை ஒரே தளத்தில் இணைத்து, சேலத்தில் ஒரு வலுவான கேம் டெவலப் மென்ட் சூழலை உருவாக்குவதே கேம் ஆன் கிளப்பின் முக்கிய நோக்கமாகும் என்றார்.

குரங்குசாவடி நிறைவாழ்வு இல்லத்தில் முதியோர் தினம் கொண்டாட்டம்



சேலம் குரங்குசாவடியில் உள்ள நிறைவாழ்வு இல்லத்தில் முதியோருக்கு உணவு வழங்கிய ஜங்ஷன் ரோட்டரி சங்க நிர்வாகிகள்.

சேலம், அக். 4: சேலம் ஜங்ஷன் ரோட்டரி சங்கம் சார்பில் நிறைவாழ்வு இல்லத்தில் முதியோர் தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது.

சேலம் ஜங்ஷன் ரோட்டரி சங்கம் கடந்த 15 ஆண்டுகளாக மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களையும், அரசு மற்றும் தனியார் சேவை நிறுவனங்களுக்கு பொருள் மற்றும் நிதியுதவிகளை வழங்கி வருகிறது. அந்தவகையில், உலக முதியோர் தினத்தையொட்டி, முதியோரை சிறப்பிக்கும் வகையில் குரங்குசாவடியில் அமைந்துள்ள நிறைவாழ்வு இல்லத்தில் உள்ள முதியோருக்கு இனிப்பு, இரவு உணவு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற போக்குவரத்து அலுவலர் சுவாமிநாதன், ஜங்ஷன் ரோட்டரி சங்க சாசனத் தலைவர் சோ.கண்ணன், துணை நிலை ஆளுநர் மனோகரன், தலைவர் ராஜவேலு, செயலாளர் கார்த்திக் சுப்புராயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இல்ல நிறுவனர் அண்ணாதுரை மற்றும் நிர்வாகி ராமஜெயம் நன்றி தெரிவித்தனர்.

சங்ககிரி தீயணைப்பு நிலையத்திற்கு நவீன கருவிகளுடன் புதிய வாகனம்!

சங்ககிரி, அக். 4: சங்ககிரி தீயணைப்புத் துறைக்கு அரசு சார்பில் நவீன கருவிகள் கொண்ட புதிய வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

சங்ககிரி தீயணைப்பு நிலையம் மூலம் சுற்றியுள்ள 34 கிராமங்கள், 126 சிறிய கிராமங்கள் பயன்பெற்று வருகின்றன. இதற்கு முன்பு அரசு சார்பில் வழங்கப்பட்ட வாகனம் 15 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. அந்த வாகனம் அரசு உத்தரவின்படி புதுப்பித்து கூடுதலாக பயன்படுத்தப்பட உள்ளது.

இந்நிலையில் தீயணைப்புத் துறையின் சேலம் மண்டல அலுவலகம் சார்பில் சங்ககிரி தீயணைப்பு நிலையத்திற்கு அதிநவீன வசதிகளைக் கொண்டு புதிய வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வாகனத்தில் 6ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த் தொட்டி உள்ளது. இந்த வாகனத்தின் இயங்கும் குதிரை திறன் பழைய வாகனத்தைவிட அதிகம். வாகனத்தில் முன்புறத்தில் வாகனங்களை மீட்க உதவியாக இரும்பு கயிறு இணைக்கப்பட்டுள்ளது.

அதேபோல வாகனத்தின் மேற்புரத்தில் நான்கு புறங்களில் சுழலும் நவீன விளக்கு பொருத்தப்பட்டுள்ளது.



சங்ககிரி தீயணைப்புத் துறைக்கு நவீன வாகனத்துடன் புதிதாக வழங்கப்பட்டுள்ள கருவிகள்.

மேலும், மழைக்காலங்களில் விழும் மரங்களை அறுக்கும் இயந்திரம், கேஸ் வெல்டிங் இயந்திரம், தண்ணீர் எடுக்க வசதியாக மின் மோட்டாரும், விளக்கு, மற்ற தேவைகளுக்கு தனியாக சிறிய ஜெனரட்டரும் வழங்கப்பட்டுள்ளது. மின் தாக்குதலை பாதுகாக்கும் கையுறைகள், பாம்பு பிடிக்கும் கருவிகள், தார்பாய் என 59 பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் இத்துறையின் சேவைக்கு 112 என்ற எண்ணில் அழைத்தால், சென்னையில் உள்ள கட்டுப்பாட்டு மையத்துடன் இணைக்கப்பட்டு, அங்கிருந்து தீயணைப்பு, காவல் துறைக்கு அழைப்பு சென்று, சம்பவ இடத்திற்கு தீயணைப்பு, காவல் துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், சங்ககிரி தீயணைப்புத் துறையில் பயிற்சி பெற்ற தீயணைப்பு நிலைய அலுவலர் கே.ரமேஷ்குமார் தலைமையில் நீச்சல் பயிற்சி பெற்ற ச.வைத்தீஷ்வரன், ஸ்கூபா நீச்சல் பயிற்சி பெற்ற அ.சிவகுமார், கயிறு ஏறுதல் பயிற்சி பெற்ற ச.கோபிநாத், பாம்பு பிடிக்கும் பயிற்சி பெற்ற ரா.விக்னேஷ் உள்ளிட்ட திறன் பயிற்சி பெற்ற வீரர்கள் உள்பட 16 பேர் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழப்பாடி உழவர் சந்தையை மேம்படுத்த வலியுறுத்தல்



வெறிச்சோடிக் காணப்படும் வாழப்பாடி உழவர் சந்தை.
(வலது) 3 ஆண்டுகளாகப் பூட்டிக்கிடக்கும் வணிக வளாகக் கடை.

வாழப்பாடி, அக். 4: வாழப்பாடி உழவர் சந்தைக்கு காய் கறி வாங்க வரும் பொதுமக்களின் எண்ணிக்கை குறைந்ததால் வெறிச்சோடிக் காணப்படுகிறது. எனவே, உழவர் சந்தையை மேம்படுத்த வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

சேலம் மாவட்டம், வாழப்பாடியில் தமிழ்நாடு அரசு வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை சார்பில் பள்ளக்காடு பகுதியில் பிரதான கடலூர் சாலையோரத்தில் 3 ஆண்டுக்கு முன்பு, ரூ. 58 லட்சத்தில் அலுவலக அறை, பொருள் பாதுகாப்பு அறை, 16 கடைகளுடன் உழவர் சந்தை அமைக்கப்பட்டது.

எதிர்பார்த்த அளவிற்கு உழவர் சந்தைக்கு காய்கறி கொள் முதல் செய்ய வரும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. பேளூர் பிரிவு சாலை பகுதியில் தனியார் காய்கறி மண்டிகள் அதிகரித்ததால், உழவர் சந்தைக்கு வருவோர் எண்ணிக்கை மேலும் குறைந்தது.

இதனால், கடை வைத்து வியாபாரம் நடத்த விவசாயிகள் தயக்கம் காட்டுவதால் 5 கடைகள் வரை திறக்கப்படாமல் உள்ளன. எனவே, உழவர் சந்தையை மேம்படுத்த நுகர்வோர் மற்றும் விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, இப்பகுதி சமூக ஆர்வலர்களிடையே கோரிக்கை எழுந்துள்ளது.

பூட்டிக்கிடக்கும் முகப்புக் கடை!

வாழப்பாடி உழவர் சந்தையின் நுழைவாயிலில் கிழக்கு புறம் ஒரு வணிகக் கடை கட்டப்பட்டுள்ளது. இந்தக் கடைக்கு உள்புற கடைகளைவிட, வாடகை இருமடங்கு அதிகம். முன்பணமும் செலுத்த வேண்டும் என்பதால் விவசாயிகள் வாடகைக்கு எடுக்கவில்லை. இதனால் 3 ஆண்டுகளாக மூடிக் கிடக்கிறது. எனவே, இந்தக் கடை வாடகை மற்றும் முன்பணத்தை குறைத்து வாடகைக்குவிட்டு, பயன்பாட்டிற்கு கொண்டுவர அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

'வடகிழக்குப் பருவமழை: பாதிப்பு புகார்களை 1077 என்ற எண்ணில் தெரிவிக்கலாம்'

சேலம், அக். 4: சேலம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை வெள்ள புகார்களை 1077 என்ற கட்டணமில்லா எண்ணில் தெரிவிக்கலாம் என ஆட்சியர் க.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆட்சியர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில், இயற்கை பேரிடரை எதிர்கொள்ளவும், முன்னெச்சரிக்கை தொடர்பான செய்திகளை உடனுக்குடன் பெறவும், தமிழ்நாடு அரசு சாசேட் மற்றும் டிஎன் அலர்ட் செயலிகளை உருவாக்கியுள்ளது.

இதை பிளே ஸ்டோரில் இருந்து பொதுமக்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதன்மூலம் தற்போதைய வானிலை முன்னறிவிப்பு, இடி மின்னலுடன் கூடிய கனமழை எச்சரிக்கை போன்ற பல்வேறு விவரங்களை அறிந்து கொள்ளலாம். இதில் பொதுமக்கள் இயற்கை பேரிடர் தொடர்பான புகார்களை தெரிவிக்கும் வசதிகளும் உள்ளன.

மேலும், சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், அறை எண். 120 மற்றும் 121-இல் மாவட்ட அவசரகால நடவடிக்கை மையம் செயல்பட்டு வருகிறது.

இந்த மையத்தில் பொதுமக்கள் தங்களது இயற்கை பேரிடர் மழை வெள்ள பாதிப்புகள் குறித்த தகவல்களையும், புகார்களையும், இதற்கான கட்டணமில்லா தொலைபேசி எண்.1077, தரைவழி தொலைபேசி எண்.0427-2452202 ஆகியவற்றில் தெரிவிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

வாழப்பாடி அருகே மான் வேட்டை: இளைஞர் கைது



கைது செய்யப்பட்ட சதீஷ்குமார் மற்றும் அவரை கைது செய்த வனத் துறையினர்.

வாழப்பாடி, அக். 4: வாழப்பாடி அருகே வனப்பகுதியில் மான் வேட்டையாடிய இளைஞரை வனத் துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

வாழப்பாடி அருகே தும்பல் வனச்சரகம் குதிமடுவு காப்புக்காடு வனப் பகுதியில் மர்ம நபர்கள் வனவிலங்குகளை வேட்டையாடுவதாக ஆத்தூர் கோட்ட வன அலுவலர் ரவிகு மாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, ஆத்தூர் உதவி வனப் பாதுகாவலர் சிவராமன், கருமந்துறை வனச்சரகர் (தும்பல் வனச்சரகர் பொறுப்பு) ரவிச்சந்திரன் ஆகியோர் தலைமையில், வனவர் முனீஸ்வரன், வனக்காப்பாளர் ஹேமா உள்ளிட்ட வனத் துறையினர், இரு தினங்களாக சோதனை நடத்தினர்.

அப்போது கண்கட்டிஆலா கிராமத்தைச் சேர்ந்த வெங்கடாசலம் மகன் சதீஷ்குமார் (19), வனப்பகுதியில் அத்துமீறி நுழைந்து வேட்டை நாய்கள் உதவியுடன் மானை வேட்டையாடி, மான் கறியை துண்டுகளாக வெட்டி உப்புக் கண்டம் போட்டு பதப்படுத்தி வைத்திருந்தது தெரியவந்தது. இதையடுத்து, அவரை ஞாயிற்றுக்கிழமை கைது செய்த தும்பல் வனத் துறையினர், வாழப்பாடி நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

வனப்பகுதியில் அத்துமீறி நுழைந்து மான்கள் உள்ளிட்ட வனவிலங்குகளை வேட்டையாடுவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம். எனவே, வனவிலங்குகளை பாதுகாக்க வனப் பகுதியை ஒட்டியுள்ள கிராம மக்கள் முன்வர வேண்டும் என வனத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில், வீரவநல்லூர், தோரணை வட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.
மின்னணு ஒப்புதற்புள்ளி கோரும் அறிவிப்பு

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள கன்னியாகுமரி மாவட்டம், தோரணை வட்டம், வீரவநல்லூர், அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில் செயல் அலுவலர் மூலமாக நகதிடனான ஒப்புதற்புள்ளி கோரப்படுகிறது

வ. எண்	பணியின் பெயர்	ஒப்புதற் தொகை (Including GST) ரூ	முன் வைப்புத் தொகை	பணி முடிக்க வேண்டிய காலம்	ஒப்புதற்கான நகதி
1.	அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில், வீரவநல்லூர், தோரணை வட்டம், கன்னியாகுமரி மாவட்டம் பருவுபார்த்தல் மற்றும் மறுசீரமைத்தல்பணி	1,32,35,885	76,500	9 மாதங்கள்	இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்/சிற்பங்கள் ஒப்புதற்புள்ளி கோரு நகதி உள்ளவர்கள் ஆவார்கள். பதிவுச் சான்று அம்மதிவாரது நடப்பில் உள்ளநகதான சான்று (LIVE CERTIFICATE), வருமான வரி சான்று, GST வரிச்சான்று, சுயந்த மாதம் GST கட்டவுந்தான சான்று.

1. ஒப்புதற்புள்ளி படிவம் https://tntenders.gov.in என்ற இணைய தளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. நிறைவு செய்யப்பட்ட ஒப்புதற்புள்ளி படிவம் 27.10.2026 பிற்பகல் 02.00 மணி வரை www.tntenders.gov.in என்ற இணையதளம் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும்.
3. மின்னணு ஒப்புதற்புள்ளி 27.10.2026 பிற்பகல் 3.30 மணிக்கு திறக்கப்படும்

ம.ச.அ.தொ.கி / 3014 / ஒப்புதற்புள்ளி / 2026

நகதல்
அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில்,
வீரவநல்லூர், தோரணை வட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.

IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்

(முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட்–நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது)
CIN : L65110TN2014PLC097792 பதிவு அலுவலகம்: KRM டவர்ஸ், 8–வது தளம், ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை–600031.தொ.பே.: +91 44 4564 4000 | தொ.ந: +91 44 4564 4022.

IDFC FIRST Bank

பொது அறிவிப்பு
தங்க ஏலம் மற்றும் அழைப்பு அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கும், பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், மேற்சொன்ன கடன்தாரர்கள் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் (வங்கி)–இடமிருந்து தங்க நகைகளை அடமானம் வைத்து கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர். பலமுறை நினைவூட்டல்களும் அறிவிப்புகளும் அனுப்பப்பட்ட போதிலும், கடன்தாரர்கள் அக்கடன் வசதியின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டனர். அதன்படி, வங்கி தனது உரிமைகளைப் பயன்படுத்தி, தனது நிலுவைத் தொகையை வவலிக்கும் பொருட்டு, அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகளை 12–11–2026 இல் இருந்து / 13–11–2026 / 16–11–2026 வரை பொது ஏலம் மூலம் விற்பனை செய்ய உள்ளது. ஆய்வு/ ஏல நாள் அல்லது ஏலம் நாளுக்கு முன்னதாகவே, நிலுவையில் உள்ள முழுத் தொகையையும், அதற்கான வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் சேர்த்துத் திருப்பிச் செலுத்த இதுவே கடைசி வாய்ப்பு என்று கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது அவ்வாறு செலுத்தத் தவறினால், அடமான தங்க நகைகள், ஒழுங்குமுறை அமைப்புகளின் வழிகாட்டுதல்களின்படி ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்

கடன் கணக்கு எண்	கடன்தாரர் பெயர்	கிளையின் பெயர்
187656593	T. சக்திவேல்	VF அரூர் IFBL
184634169	சுரேஷ் சண்முகம்	பவானி IFBL
188424258	சுந்தரம் V	மல்லூர் IFBL
187990126	வெற்றிவேல் R	கொல்லம்பாளையம் IFBL
188085718	சௌமியா முருகேசன்	பவானி IFBL
187039431	A மாதேஷ்	தாரமங்கலம் IFBL
185912640	சத்யா ராஜசேகரன்	பவானி IFBL
186114231	பழனிசாமி சண்முகம்	வாழப்பாடி IFBL
183297602	தமிழ்வாணி பெருமாள்	அஸ்தம்பட்டி IFBL
186656889	செந்தாமரை குமார்	VF பொம்மிடி IFBL
184504112	கௌரி கங்கா விஜயகுமார்	எடப்பாடி IFBL
185568351	பெருமாள் ராமு	கடலூர் NT IFBL
187108312	நாராயணன் K	கடலூர் NT IFBL
173372504	கௌரி A	திருச்செங்கோடு IFBL

இந்த ஏலத்தின் மூலம் ஏதேனும் உபரித் தொகை கிடைத்தால், அத்தொகை சம்பந்தப்பட்ட கடன்தாரருக்கு திருப்பி அளிக்கப்படும்; ஏலத்துக்குப் பிறகு ஏதேனும் பற்றாக்குறை / நிலுவைத் தொகை இருந்தால், அத்தொகை உரிய சட்ட நடவடிக்கைகளின் மூலம் கடன்தாரரிடமிருந்து வசூலிக்கப்படும். எந்தவொரு கணக்கையும் முன்னறிவிப்பு ஏதுமின்றி ஏலப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கான அதிகாரம் IDFC ஃபர்ஸ்ட் பேங்க்–க்கு உண்டு. மேலும், முன்னறிவிப்பு ஏதுமின்றி, தனது சொந்த விருப்பத்தின் பேரில் ஏல கால அட்டவணையை மாற்றியமைக்கவோ அல்லது பிற்காலத் தேதிக்கு ஒத்திவைக்கவோ IDFC ஃபர்ஸ்ட் பேங்க்–க்கு முழு உரிமை உண்டு. ஏலம், வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட ஏலச் சேவை நிறுவனமான M/S ஸ்ரீராம் ஆட்டோ மால் இந்தியா லிட்., மூலம், காலை 10:00 மணி முதல் மதியம் 01:00 மணி வரை நேரடி முறையில் நடத்தப்படும். கடன்தாரர் காலமாகிவிட்டால், ஏலம் தொடர்பான அனைத்து விதிமுறைகளும் அவரது வாரிசுதாரர் அல்லது சட்டப்பூர்வ பிரதிநிதிக்குப் பொருந்தும்.

ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1) சம்பந்தப்பட்ட தங்க நகைகள் விற்பனை, " உள்ளது உள்ள இடத்தில்' " உள்ளது உள்ள நிலையில" " உள்ளது என்னவோ அது" என்ற அடிப்படையில் நடைபெறும்.
2) ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்கள், வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட ஏலச் சேவை நிறுவனத்திடம் பதிவு செய்துகொள்ள வேண்டும்; மேலும், KYC (வாடிக்கையாளர் விவர ஆவணங்கள்) தொடர்பான தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டும்.
3) ஏலப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்னதாகவே, நகைகள் மற்றும் அவற்றின் விவரக்குறிப்புகள் குறித்து நேரில் ஆய்வு செய்து, தம்மளவில் முழுமையாகத் திருப்தி அடைவது ஏலதாரர்களின் பொறுப்பாகும். ஏலதாரர், கிளை மேலாளருடன் கலந்தாலோசித்து நகைகளை ஆய்வு செய்யலாம்.
4) பெறப்படும் அதிகபட்ச ஏலப்புள்ளி , வங்கியின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும்.
5) ஏலத்தில் வெற்றி பெற்றவர், விற்பனைக்கான முழுத் தொகையையும் குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்த வேண்டும்; அவ்வாறு செலுத்தத் தவறினால், அவர் ஏற்கனவே செலுத்தியுள்ள தொகை பறிமுதல் செய்யப்படும்.
6) தங்க ஆபரணங்கள் ஒருமுறை விற்பனை செய்யப்பட்ட பிறகு, எக்காரணம் கொண்டும் விற்பனையாளரிடம் திரும்பக் கொடுக்க முடியாது மேலும், ஏலத்தில் வெற்றி பெற்றவர்/வாங்குநர் அந்நகைகளை நேரடியாகப் பெற்றுக்கொண்ட பிறகு, விற்பனையாளருக்கு எவ்விதமான பொறுப்பும் இருக்காது.
7) வங்கியின் அதிகாரப்பூர்வ பிரதிநிதிக்கு, முன்னறிவிப்பு ஏதுமின்றியோ அல்லது எவ்விதக் காரணமும் குறிப்பிடாமலோ எந்தவொரு ஏலப்புள்ளியையும் ஏற்றுக்கொள்ள/ நிராகரிக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய/ ஒத்திவைக்க முழு உரிமை உண்டு.
8) இந்த விற்பனை, வங்கியின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும்.

ஒம்/–
அதிகாரப்பூர்வ அலுவலர்
IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்

தேதி : 05.10.2026
இடம் : தமிழ்நாடு





BHARAT FRITZ WERNER LIMITED
17/4, Devaganapalli (Vill & Po), Thally

Bharat Fritz Werner is a leading Machine Tool manufacturer and Solution provider that embodies values, vision, and an unwavering commitment to progress.
BFW is looking for a personnel for all its operations for at Thally location as detailed below:

WELFARE OFFICER

Qualification: "Post Graduate degree in Social Work, Social Welfare or M B A with specialization in Industrial Management or Personnel Management and Industiral Relations.
Experience : 2-5 Years as Welfare Officer - Engineering industry exposure preferred
Salary : As per industrial standards and negotiable for the suitable candidate Share your resume to: s.chandrababu@bfw.co.in

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' தேவில், டாக்டர் பாலசுந்தரம் ரோடு, அமினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையுறுதலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ–ஏல விற்பனை அறிவிப்பு.

ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய ரூ.7,84,719/– (01.10.2026 தேதி அன்று) தொகையை திரு.M.செல்வம் மற்றும் திருமதி.S.சுதா என்பவரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, ஆக்கபூர்வ சுவாதீனம் (constructive Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, 20.11.2026 தேதியில் காலை 10.30 மணி முதல் காலை 11.30 மணி வரை மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தார்(கள்), உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு' என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.45,00,000/– மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.4,50,000/–.

அசையாச் சொத்து விபரம்

சேலம் – 636010, ஆமனி கொண்டலாம்பட்டி கிராமம், காட்டுர், அழகு நகர், கதவு எண்.5/327ல் உள்ள 995 ச.அடி (756 ச.அடி கட்டுமானப் பரப்பு) விஸ்தீரண நிலமும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடமும் சேர்ந்த குடியிருப்புச் சொத்து.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் இணையதளத்தில் பார்வையிடலாம். www.idbi.bank.in

தேதி : 01.10.2026
இடம் : கோயம்புத்தூர்

ஒம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிபிஐ வங்கி லிட்